
# இருதயத்தின் சஞ்சலம்




**என் இருதயத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து, எதுவரைக்கும் என் ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிக்கொண்டிருப்பேன்? (சங் 13:2)**

கவலை இல்லாத மனிதர்கள் இவ்வுலகில் இல்லை. எல்லாருக்கும் ஏதோ ஒரு விதத்தில் ஒரு சஞ்சலம் இருக்கதான் செய்கிறது. ஆவிக்குரிய பிரகாரமாக பாவத்தினால் இருதயத்தில் உண்டாகும் சஞ்சலம், சரீரபிரகாரமாக வறுமையினால், நோயினால், பிறரின் அடக்குமுறையினால், வாழ்கின்ற சூழ்நிலையினால் என ஏதோ ஒரு காரியத்தினால் எல்லாவித மக்களுக்கும் ஒரு வித சஞ்சலம் இருக்கத்தான் செய்கிறது.

ஆனால் சில காரியங்கள் நாம் என்ன செய்வதென்றே தெரியாதபடி, அதே நேரத்தில் அதை கடந்தும் போகமுடியாதபடி, ஏதோ ஒரு விதத்தில் இடைவிடாது அதை பற்றிய எண்ணம் நம் இருதயத்தை வாதிக்கும். அப்பொழுது சங்கீதகாரன் **சங் 13: 2** கூறுவதை போன்ற அனுபவம் நமக்கு நேரிடும். ஆம் சில காரியங்களில் நடப்பது நடக்கட்டும் பார்த்துகொள்ளலாம் என்று நாம் கடந்துபோய்விடுகிறோம். சில காரியங்களில் இப்படிதான் வாழ்ந்தாக வேண்டும் என்று கூறி அவற்றால் உண்டாகும் சஞ்சலங்களை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் சில காரியங்கள், நாம் அவற்றை விட்டுவிடமுடியாதபடி நித்தம் நித்தம்

இருதயத்திலே அந்த சஞ்சலம் தோன்றி, நாம் எதிலும் கவனம் செலுத்தமுடியாதபடி அதை மாத்திரமே சிந்தித்து கொண்டிருக்க செய்யும்.

உதாரணமாக, இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இக்கொரோனா வியாதினால் பாதிக்கப்பட்ட பலர் இன்று குணமாகி இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிவிட்டனர், ஆனால் அதே நேரத்தில் வேறு பலர் மாத கணக்காக தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து, வாழ எந்த வழியுமில்லாமல் நிற்கின்றனர். இக்கொரோனா எப்பொழுது முடிவுக்கு வரும், எப்பொழுது நாம் வாழ்ந்து கொண்டிருந்த இயல்வு வாழ்க்கை திரும்பும் என்கிற காரியங்கள் அநேகரின் இருதயத்திலே **சங் 13:2** இல் கூறியதை போன்ற சஞ்சலத்தை ஏற்படுத்தி நித்தம் நித்தம் அதையே சிந்தித்து கொண்டிருக்கும்படி, ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிகொண்டிருக்கும்படி செய்கிறது.

ஆம் சில பெரும் துயரங்களை கூட, கஷ்டங்களை கூட, இழப்புகளை கூட நாம் சில காலங்களுக்குள்ளாக கடந்து போய் விடலாம். ஆனால் என்ன செய்வதென்றே தெரியாமல், சஞ்சலபடுவதை தவிர வேறெதுவும் செய்ய முடியாமல் இருக்கும் துன்பகாரியங்கள் நம்மை மிகவும் பாதிக்கின்றது. அப் பவுலின் வாழ்க்கையிலும் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது, எத்தனையோ பேருக்கு அற்புத சுகத்தை ஆண்டவரிடம் இருந்து பெற்று தந்த பவுல், அது தன்னைவிட்டு நீங்கும்படிக்கு கர்த்தரிடத்தில் மூன்று தரம் வேண்டிகொண்டும், அவருக்கு கிடைத்த பதில் **"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்" (2 கொ 12:9)** என்பதாகும். ஆம் யோபுவின் வாழ்க்கையில் அவர் என்ன செய்வதென்று தெரியாமல், சடுதியில் தனக்கு ஏற்பட்ட காரியங்களினால் நிலை குலைந்து போயிருந்தார். ஒரு ஓட்டை எடுத்து, தன்னை சுறண்டிக்கொண்டு சாம்பலில் உட்காருவதை **(யோபு 2:8)** தவிர வேறெதையும் அவரால் அப்பொழுது செய்ய முடியவில்லை. ஆனால் இருதயத்தில் மட்டும் சஞ்சலம் நீங்காமல், இப்பொழுது என்ன செய்வது என்றும் தெரியாமல், நித்தம் நித்தம் வேதனை அனுபவித்துகொண்டிருந்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சூழ்ந்திருக்கும் மனிதர்கள் சொல்லும் ஆலோசனையோ, செய்யும் உதவிகளோ கூட நமக்கு பயன்படாது. பவுலுக்கு ஆண்டவர் கூறியது போல, அவரது கிருபை, இரக்கம், தயவு மட்டுமே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இருந்து நம்மை வெளியே கொண்டுவர முடியும்.

**சங் 13:3,5 இல், "என் தேவனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப்பார்த்து, எனக்குச் செவிகொடுத்தருளும்; நான் மரணநித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும். நான் உம்முடைய கிருபையின்மேல்**

**நம்பிக்கையாயிருக்கிறேன்; உம்முடைய இரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும்.**", மேற்க்கண்ட வசனங்களில் கூறபட்டுள்ளபடி, கர்த்தர் தாமே இவற்றில் இடைப்பட்டு, தம்முடைய கிருபையினால், நம்மை இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து இரட்சிக்க, மீட்டெடுக்க, இருதயத்தில் நித்தம் நித்தம் உண்டாகிய சஞ்சலத்தை நீக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே நம் இருதயத்தில் களிகூருதல் உண்டாகும். **"இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும்; அதின் மகிழ்ச்சிக்கு அந்நியன் உடந்தையாகான்.", (நீதி 14:10).** ஆம், வெளிப்படையாக இருக்கும் சில பிரச்சனைகளை மற்றவர்கள் புரிந்து கொண்டு நமக்கு உதவ முடியும்.

ஆனால் இருதயத்தில் உண்டாகும் காயங்களை, துன்பங்களை, சஞ்சலங்களை தேவன் மாத்திரமே அறிய முடியும். அப். பவுலுக்கு ஆண்டவர் கூறியது போல், **சங் 13: 3,5** இல் குறிப்பிட்டுள்ளபடி, அவருடைய கிருபை மாத்திரமே நம்மை இரட்சித்து, நம்முடைய இருதயத்தை களிகூற செய்ய முடியும். அப்பொழுது அதனால் உண்டாகும் பெரும் மகிழ்ச்சி நமக்கு மாத்திரமே விளங்குமே தவிர மற்றவர்களால் அதை புரிந்துகொள்ள முடியாது. இப்படிப்பட்ட அனுபவங்களின் வழியாக கடந்து வந்த பலர் பவுலைபோல ஆண்டவருக்காக வல்லமையாக செயல்பட்டிருக்கின்றனர். ஏனெனில் அவர்கள் இருதயத்திற்கு மாத்திரமே தெரியும், எப்படிப்பட்ட சஞ்சலத்தை ஆண்டவர் ஆனந்த களிப்பாக மாற்றினார் என்று.

எனவே இக்கொரோனா காலத்திலும், இப்படிப்பட்ட சஞ்சலத்தோடு வாழும் ஒவ்வொருவரும், நித்தம் நித்தம் இருதயத்தில் உண்டாகும் வேதனையில் இருந்து நீங்க, ஆண்டவருடைய கிருபையை சார்ந்து அவருடைய இரட்சிப்பையே எதிர்நோக்கி காத்திருந்து அதை பெற்று கொள்ளவேண்டும். இக்கட்டான இக்காலத்தில் எந்த மனிதரோ, அரசாங்கமோ, பணமோ, நம் சொந்த முயற்சியோ தரமுடியாத விடுதலையை, இரட்சிப்பை, அவருடைய கிருபை நமக்கு தரும். எனவே நாம் கடந்து செல்லும் சஞ்சலம் எப்படிப்பட்டதாய் இருந்தாலும், கர்த்தர்மேல் நம் பாரத்தை வைத்து அவருடைய கிருபைக்கு காத்திருந்து இரட்சிப்பை பெற்றுக்கொள்வோம்.

**சங் 33:18 "தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்;"**, என்று வேதம் கூறுகிறது. மேலும் **"தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்." (சங் 147:11)** என்றும் வேதம் கூறுகிறது. எனவே எந்த மனிதரின், அரசாங்கத்தின் உதவியை அல்லது சூழ்நிலையின் அனுகூலத்தை நாடாமல், அவருடைய கிருபையையே சார்ந்து கொள்வோம். அது மாத்திரமே இருதயத்தின்

சஞ்சலத்தினால் நம்முடைய ஆத்துமா மரித்துபோய் விடாதபடி நம்மை மரணத்திற்கு விலக்கி காக்கும். அவருடைய பிரியம் / நேசம் நம்மை எல்லா சஞ்சலத்துக்கும் நீக்கி நித்திய ஜீவ கரையில் கொண்டு சேர்க்கும். ஆமென், அல்லேலூயா.